கோரிக்கை.	(ரூபாய் ஆயிரத்தில்
55. சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு—	12,38
56. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு—	6,57,47
57. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு—	17,66
58. பல்வகை மூலதனச் செலவு—	5,05,08
மொத்தம்—B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு	50,76,59
C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிச் செலுத்துதலும்.	
59. மாநில அரசு வழங்கும்கடன்களும் முன்பணங்களும்—	1,00,47,23
பெரு மொத்தம் ..	12,66,52,30

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) நிதி ஒதுக்க (முன்னணி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவு 1990 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (முன்னனி மானிய வாக்களிப்பு) சட்டமுன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும், ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல்

நிதி ஒதுக்க முன்னணி மானிய வாக்களிப்பு சட்டமுன் வடிவு. 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னனி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

1990 மார்ச் 20]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

வரவு-செலவுத் திட்டம், 1990-91, பொது விவாதம் — தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1990-91 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம். விவாதத்தைத் துவக்கி வைப்பவர் திருமதி ரமணி நல்லதம்பி. ஒதுக்கப்பட்ட நேரம் 15 மணித்துளிகள்.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த 1990—91-க்கான நிதிநிலை அறிக்கை பற்றி விவாதிக்கின்ற வாய்ப்பினைத் தந்தமைக்கு நன்றியைக் கூறி, என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன். வேளாண்மை, பாசனம், மின்சாரம் ஆகிய இந்த மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையது என்கின்ற நிலையிலே பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளீர்கள். ஆனால் விளையாத நிலத்திற்கு வரிகட்டி, ஓடாத மோட்டாருக்கு மின்கட்டணம் கட்டி, குடிநீரையும் விலை கொடுத்து வாங்குகின்ற இராதாபுரம் தொகுதி முழுமைக்கும், நாங்குநேரி தொகுதியின் ஒரு பகுதிக்கும், சாத்தான்குளம் தொகுதியின் ஒரு பகுதிக்கும் இந்த மானியத்திலே எந்தவிதமான சலுகைகளும் இருப்பதாகத் தெரியவில்லை. திரு. திருமலை அவர்களுடைய தலைமையிலான பாசன நீர் ஆதார நிலைக்குழு ஒன்று, பத்து பெரிய திட்டங்களை சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

11-05 மணி

அந்தத் திட்டங்களுக்குள்ளே மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் 1974 ஆம் ஆண்டு சில கட்டுமானப் பணிகளைச் செய்து, இடையிலே கைவிடப்பட்ட நிலையிலே உள்ள அந்த கொடுமுடி ஆறுத் திட்டம் சேர்க்கப்பட்டுள்ளதா, பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா என்று முதல்வரவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் துவங்கிய அந்தக் கொடுமுடி ஆறு அணையைத் தாங்களே முடித்துத் தந்து, விலை கொடுத்து நீர் வாங்கி தவித்துக் கொண்டிருக்கின்ற அந்த இராதாபுரம் தொகுதி, நாங்குநேரியில் ஒரு பகுதி, சாத்தான்குளத்தில் ஒரு